முருகப்பெருமான் துணை

**மகான் அநுமான் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.12.2023**, செவ்வாய்கிழமை

1. மன்னவனே மாதரும ராஜனே
   மண்ணுலகில் மரணமிலா தன்மை
   நன்னயமாய் மக்களெல்லாம் அடைய
   ஞானமருளிய ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அறிவிப்பேன் சோபகிருது சிலை திங்கள்
   வரங்களௌன சூல திகதி குசன் வாரம்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 03 ம் நாள், 19.12.2023, செவ்வாய்கிழமை)
   வழங்குவேன் அநுமான் யானும்
3. யானும் துல்லிய ஆசிதன்னை
   உலகநலம்பெற உரைப்பேன்
   ஞானமாக அரங்கன் அருளுகின்ற
   நன்னெறி மக்களை தேற்றி
4. தேற்றியே சமூக மாற்றமுடன்
   தேசத்தையே மாற்றம் செய்யும்
   ஆற்றல்மிக்க உயர் நெறியாகும்
   அன்னதனால் உலகோர் அனுகி
5. அனுகி அரங்கன் திருவடிபற்றி
   அனுக்கத் தொண்டர்களாகி
   ஞானதீட்சை நவவகை தீட்சை
   நயண தீட்சைபட ஏற்று
6. ஏற்றுமே சிவநெறி சைவ நெறி
   ஏற்று எவ்வுயிர்க்கும் துன்பம்தரா
   ஆற்றல் மிக்க தயவு பெருக்கி
   அரங்கனோடு ஞானிகளின் பேரில்

7. பேரிலே ஞானிகள் பூசை
பிசகில்லா நித்தம் செய்துமே
தரும வழிகளை கையில் எடுத்து
தானமாக அன்னதான சேவை

8. சேவை செய்து வருதலுற
செப்பிட ஞானிகள் ஆசிபட
அவனியில் தருமபலம் பெருகி
அனுகுவார் அனைவரும் ஞானிகளாக

9. ஆகவே நிலை உயருவரப்பா
அளவிலா தருமம் கூட்டி
செகத்தில் ஞானிகளாக சித்தி
செப்பிடுவேன் சித்தநிலை கண்டவர்கள்

10. கண்டவர்கள் அழியாமை பெற்று
கலியினில் கடைத்தேற்றம் பெறுவர்
தொண்டர்கள் ஆக ஞானிகளாக
தெய்வீக மார்கழியில் பல பேர்கள்

11. பலபேர்கள் தேர்வு கண்டுமே
பாடிடுவேன் சிரஞ்சீவி ஆவர்
வலம் வந்து ஞானயுகம் படைத்து
வையகத்தில் ஞான ஆட்சி புரிவர்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–